18th September 1961]

Labourers (Chinchona Plantations)

* 1578 *Q.*—Sri N. MARUDACHALAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆனைமலை சிங்கோனா தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1953 ஆகஸ்டு முதல் 1954 ஆகஸ்டு வரையில் வாரத்திற்கு 5 நாட்கள் வேலை கொடுத்து வந்துள்ளதைப்பற்றி தோட்டத் தொழிலாளர் சங்கம் சர்க்காருக்கு புகார் செய்துள்ளதா ?

(இ) அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) The request for the payment of lay-off compensation has been rejected.

Arrest of Plantation Workers

* 1579 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reasons for arresting some of the workers belonging to the Tamilnad Plantation at the Government Cinchona Estate, Anamalais; and

(*b*) when they are going to be charge-sheeted?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Nine workers were arrested on 26–2–61 as they took out a procession inside the Government Cinchona Estate without obtaining prior permission of the Estate authorities;

(*b*) Further action against them has been dropped. Hence the question of charge-sheeting them does not arise.

Sri M. KALYANASUNDARAM : இதற்கு முந்திய கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூட, அவர்களுடைய கோரிக்கையை நிராகரித்துவிட்டதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கையை வற்புறுத்தி எடுத்துக் கூறுவதற்காக அதிகாரியைப் பார்க்கச் சென்றார்களே தவிர, கூட்டம் நடத்தவோ ஊர்வலம் செல்வதற்காகவோ அல்ல. அப்படியிருக்கும்போது, போலீசார் குறுக்கிட்டு, கைது செய்யவேண்டியதன் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கோரிக்கைகளை அதிகாரிகளிடம் எப்போதும் தெரிவிக்கலாம். அதற்காக 'டெமான்ஸ்ட்ரேஷன்', ஊர்வலம் எல்லாம் அவசியம் இல்லை. அம்மாதிரி அவர்கள் போனார்கள். அனுமதி இல்லாமல் அம்மாதிரி போனதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Sri V. K. KOTHANDARAMAN : இப்படி ஊர்வலமாகச் செல்வதற்கு முன்பு பல கோரிக்கைகளைக் கொண்ட மகஜர்களைப் பலமுறை கொடுத்தும், அவைகளைக் கவனிக்காத நிலைமையிலே

தான் ஊர்வலமாகச் சென்று அதிகாரியைப் பார்ப்பது என்ற நோக்கத்தோடு போனார்கள். அப்படிப் போனது தவறு? அதற்காக வேண்டி 'அரெஸ்ட்' செய்தது முறையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஊர்வலமாகப் போனார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொள்வதுபற்றி மகிழ்ச்சி. அனுமதி இல்லாமல் ஊர்வலம் போனதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Famine Relief Work

* 1580 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken for the formation of Pond Works in Erode taluk to give relief to the drought affected people of that area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have not sanctioned pond works in Erode Taluk as a relief measure as the conditions in the taluk did not warrant any such step.

SRI N. K. PALANISAMI: May I know whether there is any proposal to entrust the work of formation of ponds to the District Collectors instead of the Food Production Department, and if so, may I know the reasons for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have no idea about it just now. So, I would like to have notice.

SRI R. KRISHNASAMI NAIDU: இந்தக் கேள்வியில் "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக" என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், "பஞ்ச நிவாரணம்" என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில்கூட, "பஞ்ச நிவாரணம்" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டு பணம் ஒதுக்கப்படுகிறது. பஞ்சங்கள் எந்தக் காலத்திலோ ஏற்பட்டன. அப்பொழுது இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டது பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால், இப்பொழுது அவசியமில்லை. ஆகையால், இனிமேல் அந்த முறையைக் கையாளாமல் மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

DEPUTY SPEAKER: How does it arise from the main question?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்குத் தனியாக கேள்வி போடலாம்.

Public Works Department Shed (Aduthurai)

* 1581 Q.—T. R. RAMAMIRTHA THONDAMAN: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஆடுதுறையில் ஷெட்டை (P.W.D). அகற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா?